Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. STC.NO.478/2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 03 Page.No. 17/24

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சீனிவாசன் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. ராமசாமி நாயுடு | தொழில் | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| கிராமம் | வாணியம்பாடி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 60 |
| எதிரி ஆஜர் | | | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 30th day of June 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அ.சா.3 திரு. சீனிவாசன் முதல் விசாரணை**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 31.03.2022 எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் எதிரியின் வீட்டின் பின்புறம் காலை 10.30 மணிக்கு கண்காணித்தபோது ஆஜர் எதிரியை தகவளாளி அடையாளம் காட்ட அவரை விசாரித்த போது அவரிடம் இருந்த ஒரு கருப்பு நிற பாலீதின் பையில் போதைபொருள் கஞ்சா இருந்தது. எனவே அன்றைய தினம் 1.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 96/2022 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.05ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவை முதல் நிலைக்காவலர்கள் மூவேந்தன் மற்றும்

சண்முகம் முன்னிலையில் காலை 11.00 மணிக்கு சம்பவ இடத்திலா் வைத்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து இரண்டு மாதிரிகள் எடுத்து சீல் வைத்தேன். மேலும் எதிரியை பின்னர் அன்றைய தினமே மாலை 03.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கோவிந்தராஜ் மற்றும் ஜெகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தேன். **(அவை முறையே என்னால் அ.சா.ஆ.06, 07 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கின் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.08 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** மேலும் கைப்பற்ப்பட்ட போதைபொருளை பகுப்பாய்விற்கு அனுப்பி கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்னம் போதை பொருள் தான் என்று அறிக்கை பெற்றேன். **( அந்த ஆய்வு அறிக்கை அ.சா.ஆ. 09 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)**

பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 20(b)(ii)(A) NDPS Actன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

. இவ்வழக்கில் பொதுமக்கள் யாரும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். இரகசிய தகவலாளி போன் மூலம் தகவல் அளித்தார். சம்பவ இடம் ஆனது காவல் நிலைய்தில் இருந்து 2 கீ.மீ தொலைவில் உள்ளது. சம்பவ இடத்திற்கு நானும் முதல்நிலைக்காவலர்கள் மூவோந்திரன் மற்றும் சண்முகம் ஆகியோர் இருசக்கர வாகனங்களில் சென்றோம். நாங்கள் சென்ற போது அங்கு பொதுமக்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகாமையில் பலவீடுகள் உள்ளன் என்றால் சரிதான். அங்குள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்க வில்லை என்றால் சரியல்ல. யாரும் முன்வரவில்லை. சம்பவ இடத்தில் சுமார் இரண்டு மணி நேரம் இருந்தோம். இந்த வழக்கில் அனைத்து விசாரணையும் நான் தான் மேற்கொண்டேன் என்றாலும் நானே இவ்வழக்கின்

புகார்தாரர் என்றாலும் சரிதான். எதிரியின் வீட்டு கதவு எண். இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரியின் வீட்டில் உள்ளவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருளை நாங்கள் எடுத்து சென்ற எலட்ரானிக் எடை போடும் கருவி மூலம் எதிரியை கைது செய்த இடத்தில் வைத்து எடை போட்டேன். எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேனா என்றால் சரிதான். நான் கூறுவது போல் எதிரியிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் எதிரி அதில் கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் புள்ளிவிவரத்திற்காக தொடுக்கப்பட்ட சாட்சிகள் என்றாலும், இவ்வழக்கு சாட்சிகள் எங்கள் காவல் நிலைய்தில் பணியாற்றும் காவலர்கள் என்பதால் நான் கூறியதன் பேரில் அவர்கள் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரியல்ல.

// **உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**